<u>தேதி - 21.01.2025</u>

<u>அமர்வு வழக்கு எண்.371/2019</u>

<u>அ.சா.15– திரு. **K**.மாடசாமி</u>

<u>(எதிரி ஆஜர்)</u>

<u>**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்குவிசாரணை தொடர்ச்சி**</u>

என்னுடைய அலுவலகத்தில் வழக்கு சம்பவ சமயத்தில் சி.சி.டி.வி கேமரா இயங்கி கொண்டிருந்தது. இந்த வழக்கில் அ.சா.1 முதல் 5 மற்றும் இறந்து போனவரின் உறவினர்கள் ஆகியோர் காவல்நிலையத்தில் வழகக்கு சம்பவ தினத்தன்று இரவு 7.00 மணியில் இருந்து 10.00 மணி வரை காவல்நிலைய வளாகத்தினுள் இருந்தோம் என்று குறிப்பாக யாரும் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் சாட்சி ரமேஷ் என்ற காவலருக்கு இறந்து போன அறிவழகனை யார் அடையாளம் காட்டினார் என்ற விபரத்தை சாட்சி ரமேஷ் என்னுடைய விசாரைணயில் சொல்லவில்லை என்றால் சரிதான், ஆனால் இறந்து போன அறிவழகனை நான் தான் ரமேஷ்-க்கு அடையாளம் காட்டினேன். இந்தவழக்கில் அ.சா.1 முதல் 5 ஆகியோர் எனது விசாரணையின்படி அவர்கள் நேரில் பார்த்த சாட்சிகள் என்றால் சரிதான். அ.சா.1 ஆம்புலன்சை வரவழைத்து காயம்பட்ட அவரது கணவரை மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் எடுத்து சென்றதாக போலிஸ் விசாரணையில் கூறியுள்ளார். அ.சா.1 அவ்வாறு எனது விசாரணையில் கூறவில்லை என்றும், பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.2 முதல் 5 சாட்சிகளுக்கு ஆம்புலன்ஸ் வந்தது என்றம், காயம்பட்டவரை ஆம்புலன்சில் ஏற்றிச் சென்றார்கள் என்று மட்டுமே என்னுடைய விசாரணையில் கூறியுள்ளார்கள். அவர்கள் காயம்பட்டவரை ஆம்புலன்சில் ஏற்றுவதற்கு உதவி செய்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.2 முதல் 5

சாட்சிகள் இறந்து போனவருக்கும், அ.சா.1 க்கும் தூரத்து உறவினர்கள் மற்றும் பகத்து ஊர்க்காரர்கள் என்பதால் தெரிந்தவர்கள் என்றால் சரிதான். வழக்கு சம்பவஇடத்தில் இருந்த மற்ற தனிநபர் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 என்னிடம் கொடுத்த புகாரில் எதிரி மாறி மாறி வெட்டினார் என்று குற்றச்சாட்டு கூறியுள்ளார் என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் அவருடைய கணவரின் முன்பக்க கழுத்தில் மாறி மாறி வெட்டியதாக சொல்லியுள்ளார். இந்த வழக்கில் நான் கைப்பற்றியதாக சொல்லும் அருவாளில் எதிரியின் கைரேகை உள்ளதா என்பதற்கு கைரேகை நிபுணருக்கு அனுப்பப்பட்டதா என்றால் கைரேகை நிபுணர் சம்பவ இடத்திற்கு வந்தார், ஆனால் சம்பவம் நடந்து 6, 7 மணி நேரம் கழிந்ததால் மேற்படி அருவாளில் கைரேகை எதுவும் தென்படவில்லை. அந்த கைரேகை நிபுணரை விசாரித்தேன், ஆனால் அவருடைய வாக்குமூலம் பெறப்படவில்லை. அந்த அருவாளில் இரத்தக்கறை இருந்ததா என்பது பற்றி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன். அந்த அருவாளில் இருந்த இரத்தக்கறையும், இறந்து போனவரின் இரத்த வகை பிரிவும் ஒரே நபரை சார்ந்தது என்பதற்கு இந்த வழக்கில் அறிக்கை எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் நான் கைப்பற்றியதாக சொல்லப்படும் அருவாளை மருத்துவரிடம் காண்பித்து இறந்து போனவருக்கு மேற்படி அருவாளால் காயம் ஏற்பட வாய்ப்பு உண்டா என்று கேட்டேனா என்றால் கேட்டேன, ஆனால் அதற்கென்று மருத்துவரிடம் அறிக்கை எதுவும் பெறவில்லை. அவ்வாறு அருவாளை காண்பிக்கவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. விபத்து பதிவேட்டில் இறந்தவரை யார் மருத்துவமனையில் கொண்டு வந்துசேர்த்தார்கள், அவர் உடலில் காணப்பட்ட காயம் சம்பந்தமான விபரங்கள் எதுவும்

குறிப்பிடப்படவில்லை என்ற விபரத்தை என்னுடைய விசாரணையில் தெரிந்த கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன், அவரது மனைவி மருத்துவமனையில் சேர்த்ததால் அவசரத்தில் எழுதவில்லை என்று மருத்துவர் கூறினார். மேற்படி விபரங்களை விபத்து பதிவேடு பதிவு செய்த மருத்துவர் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரியை கைது செய்ததாக சொல்லும் இடத்திற்கு நான் இந்த வழக்கின் சாட்சியாக உள்ள வி.ஏ.ஓ. மற்றும் தலையாரியை கூட்டிச் சென்று, அங்குள்ள தனிநபர் சாட்சிகள் முன்பு எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்பு வரை எதிரியை எனக்கு தெரியாது என்றால் சரிதான், ஆனால் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் அவருடைய உயரம் மற்றும் அடையாளங்கள் தெளிவாக குறிப்பிட்டு கூறினார்கள். எந்த சாட்சிகள் எதிரியின் உயரம் மற்றும் அடையாளங்கள் குறிப்பிட்டு சொன்னார்கள் என்றால் இறந்து போனவரின் மனைவி கூறினார் மற்றும்மற்ற சாட்சிகளும் கூறினார்கள். எதிரியின் அங்க அடையாளம் மற்றும் உயரம் ஆகியவற்றை எந்த சாட்சியும் எனது விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும், வழக்கிற்காக தற்போது தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எதிரியின் மனைவியையும் சேர்த்து வழக்கு பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். அதன்பின்பு, எனது விசாரணைப்படி அவர் சம்பவ இடத்தில் இல்லாததாலும், சம்பவத்திற்கு தொடர்பு இல்லாததாலும் அவரை வழக்கில் இருந்து விடுவித்தேன் என்றும் சொன்னால் சரிதான். நான் இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்த பின்பும், அறிவழகனை கொன்ற உண்மை குற்றவாளி கிடைக்காததால் வழக்கில் விடுவித்த எதிரியின் கணவரை இந்த வழக்கில் பொய்யாக சேர்த்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இறந்து போன அறிவழகன் மற்றும் விடுவித்த எதிரி இருவருக்கும் இடையே நடந்ததாக கூறப்படும்

சிவில் வழக்கு மற்றும் வீடு பிரச்சனைக்கு நான் எந்த ஒரு ஆவணத்தையும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். அவர்களுக்குள் எந்தவித பிரச்சனையும் கிடையாது என்றும், அ.சா.1 கொடுத்த புகாரில் சொல்லப்பட்ட விபரம் தவறு என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கை பொறுத்தவரை தஞ்சாவூர் மாவட்டம் வல்லம் கிராமத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட எதிரியின் கணவரை விசாரணை என்ற பெயரில் அழைத்து வந்து, காவல்நிலையத்தில் வைத்து வி.ஏ.ஓ. மற்றும் தலையாரி முன்பு எழுதாத வெற்றுத்தாளில் கையொப்பத்தை பெற்று, அதை ஒப்புதல்வாக்குமூலமாக மாற்றி அதனடிப்படையில் வழக்குச்சொத்து அருவாள் மற்றும் கருப்பு கலர் பேக் ஆகியவற்றை கைப்பற்றியதாக பொய் வழக்கு பதிவு செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இறந்து போன நபருக்கும், அ.சா.1 க்கும், எதிரிக்கும் உறவினர்கள் என்ற உறவை தவிர அவர்களுக்குள் முன்விரோதம் எதுவும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. இறந்து போன அறிவழகன் பைனான்ஸ் தொழில் செய்து வந்தார் என்ற விபரத்தை அவரது மாமனார் எனது விசாரணையில் கூறியுள்ளாரா என்றால் கூறியுள்ளார். அ.சா.1 இறந்து போன அறிவழகன் பைனான்ஸ் தொழில் செய்து வந்த விபரத்தை எனது விசாரணையில் கூறியுள்ளார் என்றால் சரிதான். இறந்து போன அறிவழகன் பைனான்ஸ் தொழில் செய்து வந்தார் என்று என்னுடைய விசாரணையில் அ.சா.1 சொல்லியுள்ளாரா என்றால் சொல்லியுள்ளார். அ.சா.1 புகாரிலோ, எனது விசாரணையிலோ எந்த உறவினரை சந்தித்து விட்டு திரும்பி கொண்டிருந்தார்கள் என்ற விபரத்தை குறிப்பாக சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். எனது விசாரணையில் அ.சா.1 ம், இறந்துபோன அறிவழகனும் இருசக்கரவாகனத்தில் சென்று உறவினரை பார்த்து விட்டு திரும்பி கொண்டிருந்தோம் என்று குறிப்பாக சொல்லியுள்ளாரா என்றால்

இல்லை, நடந்து வந்ததாக அ.சா.1 கூறியுள்ளார். அ.சா.1 மற்றும் அ.சா.1 ன் தகப்பனார் (அ.சா.6) சொல்லியபடி பைனான்ஸ் தொழில் செய்து வந்த இறந்து போன அறிவழகன் பைனான்ஸ் தொழிலில் ஏற்பட்ட பிரச்சனையில் விநாயகர் சதுர்த்தி கூட்டத்தில் யாரோ கொலை செய்துவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு சம்பவ தினத்தன்று விநாயகர் சதுர்த்தி ஊர்வலம் சம்பவ இடததை கடந்த சென்று ஒரு மணி நேரம் கழித்து தான் சம்பவம் நடந்தது. விநாயகர் சதுர்த்தி ஊர்வலத்தில் பைனான்ஸ் தொழில் முன்விரோதம் காரணமாக அறிவழகனை யாரோ கொலை செய்து இருக்கலாம் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கை நான் முறையாக புலன்விசாரணை செய்யவில்லை என்றும், வழக்கிற்காக ஆவணங்களையும், சான்றுப்பொருட்களையும் பின் தேதியிட்டு பின்னிட்டு தயார் செய்து, குற்றப்பத்திரிக்கையில் இணைத்து எதிரி மீது பொய்யான குற்றச்சாட்டை சுமத்தி நீதிமன்றத்தில் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் பிரேதவிசாரணை சாட்சிகள் யாரையும் நான் சாட்சியாக விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் வழக்கிற்கு உதவியாக இருந்ததாக சொல்லப்படும் காவலர்களுக்கு வழங்கிய கடவுச்சீட்டுகள் எதையும் நீதிமன்றத்தில் சான்றாவணமாக சமர்ப்பிக்கப்படவில்லை என்றால் சரிதான்.

ஒப்பம்/-****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்
கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

Sd./-xxxx

முதன்மை அமர்வு நீதிபதி,
மதுரை.